**வரையறுக்கப்பட்ட ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனி - 2016**

---

வரையறுக்கப்பட்ட ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றல் கூற்று, காசுபாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைதிறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்துக்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) 2016 ஜனவரி 01 இல் உள்ளவாறு தாய்க் கம்பனியின் கணக்கில் காட்டப்படடிருந்த ரூபா 4,496,257 ஆன சென்மதி தொகையினை பதிவழிப்பதற்கு சபையினால் 2016 பெப்ரவரி 08 இல் ஓர் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இம்மீதி மீளாய்வாண்டு காலத்தில் நிறுத்திவைக்கபட்ட வருவாய்களிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) பிரிவு 3.2 (ஏ) இன் பிரகாரம் முறையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) பிரிவு 10.21 இன் பிரகாரம், 2016 பெப்ரவரி இல் செலுத்தப்பட்ட 2015 திசெம்பர் மாதம் தொடர்பிலான சம்பளமும் கூலியும் ரூபா 120,746 ஆன தொகை பின்னோக்கி சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணனிகளுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 28,181 ஆக இருந்த போதிலும், ரூபா 9,393 இனால் குறைத்து, ரூபா 18,788 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வரையறுக்கப்பட்ட ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனியினது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான தோற்றத்தினைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தின் அரைப்பங்கிற்குக் குறைவாக அதன் தேறிய ஒதுக்குகள் காணப்படுகின்ற போது, 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் தேவைப்பாட்டிற்கமைய இருபது வேலைநாட்களுக்குள் பங்குதாரர்களிற்கு ஒரு சிறப்பு பொதுக்கூட்டத்திற்கான அழைப்பு விடப்பட்டிருக்கவில்லை

**2.3 கம்பனியின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு**

2014 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வரும் ஆண்டுகளிற்கான கம்பனியின் நடைமுறைச்சொத்து மற்றும் நடைமுறைப்பொறுப்பு என்பவற்றை பகுப்பாய்வு செய்யும் போது, தொடர்ச்சியாக ஒரு எதிர்க்கணியத் தொழிற்படுமுதல் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கூறப்பட்ட மூலதனத்தை அதே காலத்திற்குறிய தேறிய சொத்துடன் பகுப்பாய்வு செய்கையில், ஒரு எதிர்க்கணியத் திரவத்தன்மை அவதானிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காட்டப்படுகின்றது.

| விபரம் | **2016**<br>**ரூபா** | **2015**<br>**ரூபா** | **2014**<br>**ரூபா** |
|---|---|---|---|
| நடைமுறைச் சொத்து | 1,212,198 | 185,511 | 185,511 |
| (கழி)<br>நடைமுறைப் பொறுப்பு | (5,957,679) | (4,681,768) | (4,679,267) |
| **தொழிற்படு முதல்** | **(4,745,481)** | **(4,496,257)** | **(4,493,756)** |
| தேறிய சொத்து | (4,619,229) | (4,496,257) | (4,493,756) |
| (கழி)<br>கூறப்பட்ட மூலதனம் | (2,500,000) | (2,500,000) | (2,500,000) |
| **திரவத்தன்மை எல்லை** | **(7,119,229)** | **(6,996,257)** | **(6,993,756)** |

எனினும், கம்பனியின் வியாபாரத்தை நிறுத்துவதற்கு அல்லது கலைப்பதற்கு கம்பனியின் முகாமைக்கு எவ்வித எண்ணமும் கிடையாது என கம்பனியின் தலைவர் 2017 நவெம்பர் 16 ஆம் திகதி எனக்கு அறிவித்திருந்தார்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைவாக, 2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளிலிருந்தான வரிக்குமுன் தேறிய நட்டம் ரூபா 4,613,969 ஆனது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்குமுன் தேறிய நட்டம் ரூபா 2,500 உடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் நிதி பெறுபேறுகளில் ரூபா 4,611,469 ஆன பின்னடைவினைச் சுட்டிக்காட்டுகின்றது. சம்பளம் மற்றும் கூலிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் வருமானம் அதிகரிக்காமை என்பன கம்பனியின் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறுகளின் பின்னடைவிற்கான பிரதான காரணங்களாகும்.

2016 ஆம் ஆண்டிற்கான செலுத்தப்பட்ட சம்பளங்கள், வரிகள் மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற்கொண்டதன் பின்னர், அவ்வாண்டிற்கான கம்பனியின் பெறுமதி சேர்க்கையானது ரூபா 842,086 ஆக அறிக்கையிடப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாட்டு பலவீனங்கள்

ரூபா 5,437,267 ஆன தொகை அல்லது வருமானத்தின் 322 சதவீதம் மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் கூலிகளாக செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக மீளாய்வாண்டில் கம்பனியின் மீண்டுவரும் செலவுகளை ஈடுசெய்வதற்காக ரூபா 10,294,822 ஆன ஒரு தொகை தாய்க்கம்பனியினால் வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

நிறுவன கூட்டிணைந்த திட்டம் எதிர்கால தோற்றப்பாட்டில் பணிப்பாளர் சபையினதும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினதும் அர்ப்பணிப்பின் ஒரு பிரதிபலிப்பாக இருக்கின்றது. எனினும், 2003 யூன் 02 இன் பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல பீஈடி/12 பிரிவு 5 இன்

பிரகாரம், ஒரு கூட்டிணைந்த திட்டம் கம்பனியினால் அதன் தொடக்க காலத்திலிருந்து தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் பரப்புகளில் கணக்கீடு மீதான கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பகுதிகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) தொழிற்படுமுதல் முகாமைத்துவம் | பொறுப்புக்களின் அளவிற்கேற்ப செயற்பாட்டு காசு உட்பாய்ச்சலை அதிகரித்தல் |
| (ஆ) செலவுகள் மீதான கட்டுப்பாடு | சம்பளம் மற்றும் கூலிகளை குறைத்தல் அல்லது வருமானத்தை அதிகரித்தல் |